1995 ஏப்ரல் 21]

391—

விவசாயிகளுக்கு டீசல் என்ஜின் வழங்குதல்.

****22754*—திரு. பி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாவாரி பகுதியாக விளங்கும் வேதாரண்யம் பகுதியில் இறைவைப்பாசனத்தையே நம்பியுள்ள விவசாயிகளுக்கு சிறப்பு முன்னுரிமையில் அதிகளவு டீசல் என்ஜின் மானியத்தில் வழங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

அரசு ஆணை எண். *572*, வேளாண்மை, நாள் *12-10-94*-ல் தீவிர வேளாண் பெருக்குத்திட்டததின்கீழ், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள (சென்னை, நீலகிரி நீங்கலாக) சிறு/குறு விவசாயிகளுக்கு ரூ *196.96* இலட்சம் செலவில் டீசல் இன்ஜின் மானியத்துடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, வேண்டிய அளவுக்கு டீசல் இன்ஜின்கள் வேதாரண்யம் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

393—

நன்னிலம் பகுதியில் தொழிற்பேட்டைகள் துவங்குதல்

**36447*—டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம்-நரிமணம் பகுதியில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மூலம் தொழிற்பேட்டைகள் துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கு எவ்வளவு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது ?